**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 104/2022**

**நாள்: 12.11.2025**

**அரசு தரப்பு சாட்சி** : 17 (LW34)

2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 12ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாமிநாதன் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( 1 முதல் 7 எதிரிகள் ஆஜர். )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் தற்போது இராமேஸ்வரம் போக்குவரத்து காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் மண்டல் மாணிக்கம் காவல் நிலையத்தில் நான் காவலராக பணியாற்றியபோது, கடந்த 30.07.2021ம் தேதி மதியம் 01.00 மணியளவில் மண்டலமாணிக்கம் காவல் நிலைய குற்ற எண். 139/2021 வழக்கில் பதிவு செய்யப்பட்டிருந்த முதல் தகவல் அறிக்கையை பெற்று, கமுதி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் வழக்கமாக நீதிமன்ற பணிகளை செய்வேன் என்றால் சரியல்ல.



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.12 18:10:41 +0530

அன்றைய தினம் நான் ஆய்வாளரின் உத்தரவுக்கிணங்க முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். நான் நீதிமன்றத்தில் யாரிடம் ஒப்படைத்தேன் என்றால் நீதிமன்ற ஊழியரிடம் ஒப்படைத்தேன். அவரது பெயர் மற்றும் பதவி எனக்குத் தெரியாது. எத்தனை மணிக்கு ஒப்படைத்தேன் என்றால் 30.07.2021ம் தேதி பிற்பகல் 01.30 மணியளவில் ஒப்படைத்தேன். காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கையை என்னிடம் கொடுத்த போது நேரம் பிற்பகல் 01.00 மணி இருக்கும். நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்த நேரம் பிற்பகல் 01.30 மணி இருக்கும்.

நீதிமன்றத்திற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 7 கிமீ தொலைவு இருக்கும். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன தேதியில் முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றாலும், எனது மேலதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.12 18:10:43 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .